

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.8.2025) தலைமைச் செயலகத்தில், HWASEUNG FOOTWEAR குழும நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் கே.ஓய். லி, காலணி பிரிவு முதன்மை செயல் அலுவலர் பாப் ஷரோக், இயக்குநர் ரீனி ஷின் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கத்தில் ஊடக விவாதங்களில் பங்கேற்கும் கழக முன்னணியினரையும் கழகத்தின் செய்தித்தொடர்புக் குழுவையும் சந்தித்து ஆலோசனைகளை வழங்கினார்.

### நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கான

# விபத்து மரண இழப்பீடு ரூ.2 லட்சமாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு – அரசாணை வெளியீடு!

சென்னை, ஆக.24-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் விபத்து மரண இழப்பீடு தொகை ரூ.1 இலட்சம் என்பது ரூ.2 இலட்சம் ஆகவும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பீட்டு தொகை ரூ. 20 ஆயிரம் என்பது ரூ.1 இலட்சம் ஆகவும், இயற்கை மரணத்துக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூ.20 ஆயிரம் என்பது ரூ.30 ஆயிரம் என உயர்த்தி உத்தரவுக்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:-

2025 - 2026 -ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு, விபத்து மரணத்துக்கான இழப்பீடு, விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கு நிதி உதவி, இயற்கை மரணத்துக்கான நிதி உதவி, இறுதிச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி ஆகியவை உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி, நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு விபத்து மரணத்துக்காக வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகை ரூபாய் 1 இலட்சம் என்பதை ரூபாய் 2 இலட்சம் என்றும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்காக வழங்கப்பட்டு வரும் நிதிஉதவி ரூபாய் 20 ஆயிரம் என்பதை ரூபாய் 1 இலட்சம் என்றும், இயற்கை மரணத்துக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 20 ஆயிரம் என்பதை ரூபாய் 30 ஆயிரம் என்றும், இறுதிச்சடங்குக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 2,500 என்பதை ரூபாய் 10 ஆயிரம் என்றும் உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதற்குரிய அரசாணை 4.8.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

### பீகாரில் ராஜ்கிரில் ஆக.29 முதல் செப். 9 வரை நடைபெற உள்ள

# "ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை - 2025"!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்!

சென்னை, ஆக.24-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பீகார் மாநிலம் ராஜ்கிரில் 29.8.2025 முதல் 7.9.2025 வரை நடைபெற உள்ள "ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025" யை தமிழ்நாட்டில் பொதுமக்களின் பார்வைக்காக நேற்று முன்தினம் (22.08.2025) அறிமுகப்படுத்தினார்.

"ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025" பீகார் மாநிலம் ராஜ்கிரில் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 7, 2025 வரை நடைபெற உள்ளது. சிறப்பு வாய்ந்த இந்தப் போட்டியில் 8 ஆசிய நாடுகள் மோதுகின்றன.

இப்போட்டியில் இந்திய அணி, மலேஷியா, ஜப்பான், சீனா மற்றும் கஜகஸ்தான் ஆகிய அணிகளுடன் A பிரிவில் இடம் பெற்றுள்ளது. கொரியா, வங்கதேசம் மற்றும் சீன தைபே அணிகள் B பிரிவில் இடம் பெற்றுள்ளன. இதில் ஆசிய பட்டம் வெல்லும் அணி 2026 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பைக்கு நேரடியாக தகுதி பெறும்.

தமிழ்நாடு ஹாக்கி யூனிட் ஏற்பாட்டில் தமிழ்நாட்டில் ''ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025" யை தமிழ்நாட்டில் பொதுமக்களின் பார்வைக்காக நேற்று முன்தினம் (22.08.2025) அறிமுகப்படுத்தி, "பாஸ் தி பால் டிராபி சுற்றுப் பயணத்தை" (PASS THE BALL TROPHY TOUR) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் பொதுமக்களின் பார்வைக்காக ''ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை" பயணம் செய்ய உள்ளது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செய லாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சம்மேளனத்தின் பொருளாளரும் தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவருமான சேகர் ஜெ. மனோகரன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் பொருளாளர் கே. இராஜராஜன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் இணை செயலாளர் டி. கிளெமென்ட் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆத்தூர் கிழக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



காட்டுப்புத்தூர் பேரூர்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



எடப்பாடி நகரம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



சாத்தூர் நகரம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.



பாலக்கோடு மேற்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



மானாமதுரை மேற்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.



பல்லாவரம் தெற்குப் பகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.